இரவும் பகலும் இயற்கையின் சீற்றம்,
என வாழ்ந்து வந்தேன்;
உன் அழகை காணும் வரை.

காலமும் நேரமும் நில்லா பிரயாணிகள்,
என நினைத்தி ருந்தேன்;
உன் சிரிப்பில் நான் வாடும் வரை.

கடந்ததும் நிகழும் எதிற் முனைகள்,
என அறிந்தவன் போலிருந்தேன்;
உன் அருகில் சேரும் வரை.

கடலும் வானமுமே அளவில்லா தவை,
என வியத்திரு ந்தேன்;
உன் அன்பில் கலக்கும் வரை.

வாழ்வும் வீழ்வுமே இரு கரைகள்,
என தத்தளித்தேன்;
உன் காதல் தீவை காணும் வரை.

பூவும் வண்டும்,
வேறெந் திருந்தேன்;
உன் இமைகள் திரக்கும் வரை.

புயலும் இரவும்,
அழகாக பின்னக்கண்டேன்;
உன் கூந்தலெனும் பட்டுச் சேலையிலே!

தமிழும் இசையும்,
எதிறொலிக்கக் கேட்டேன்;
நீ பேசிய ஒற்றைச் சொல்லினிலே!

மரு ஜென்மம் பெற்றேனென மகிழ்ந்திருந்தேன்,
பெண்ணே! உன் நிழல் எனும் தீயில்
என் உயிர் மாயும் வரை.